1973 ஆகஸ்ட் 6]

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் கொள்முதல் செய்கிற விலைக்கும், நீங்கள் விற்கிற விலைக்கும் நிறைய இடைவெளி இருக்கிறது. கேட்டால் லாரி சார்ஜஸ், கோடவுன் வாடகை என்றெல்லாம் சொல்கிறார்களே, அது தனி நபர் போடுகின்ற செலவைவிட குறைவா அல்லது அதிகமா? அதிகமானல் அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முன்பு சொன்ன மாதிரி, மத்திய சர்க்காரிலே எப்.ஸி.யால் கொடுக்கப்பட்டிருக்கின்ற ரேட்டைத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். கூடியவரையிலும் தனியார் போடுகின்ற விலையைவிடக் குறைவாகத்தான் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

Ground water resources in Tiruttani taluk.

* 47. THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the ground water division has submitted its report with regard to the ground water resources in Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை, திருத்தணி வட்டத்தில், 500 புதுக் கிணறுகள் தோண்டவும், 500 கிணறுகளை ஆழப்படுத்தவும், 1,000 விசையேற்றங்களைப் பொருத்தவும் வாய்ப்புகள் உள்ளன என்று பரிந்துரை செய்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தப் பகுதிகளிலே யெல்லாம் ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு எல்லாம், கிணறுகள் தோண்டுவதற்கும், பம்புசெட்டுகள் போடுவதற்கும் வசதிகள் செய்து தருவதில்லை. அதை அரசு கவனிக்குமா? ஸ்மால் பார்மர்ஸ், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு அப்படிப்பட்ட வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் படியும் சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படியும் மத்திய சர்க்கார் நிலநீர் ஆராய்ச்சித் துறையினர் சொல்கிறபடியும் விஸ்தீரணம் தகுந்தவாறு இருந்தால் கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. சி. ஆறுமுகம் : முன்பு இருந்த ஸ்கீம் நார்மல் ஸ்கீமாக இருந்தது. இப்பொழுது ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இதனால் ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கின்றவர்களுக்கு வசதிகள் கிடைப்பதில்லை. அது மட்டு மல்ல, கடலோரப் பகுதிகளிலே 6 மைல்களுக்கு அப்பால் உள்ள கிணறுகளுக்குத்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியிலே கடலோரப் பகுதிகளிலேகூட நல்ல நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. எனவே அந்த விதிமுறையைத் தளர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் வந்த பிறகு சில இடங்களில் பாதிக்கப்படுகின்றது என்று பேசப்படுகிறது. பாதிக்கப்படாத அளவில் இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Milk Powder Plant.

* 48 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation have proposals under consideration to start a skimmed Milk Powder Plant in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், மதுரையில் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தத் திட்ட மிட்டுள்ளது. நாளொன்றுக்கு 10 டன் பால் மாவு உற்பத்தி செய்யும் திறனுடையதாய் இத் தொழிற்சாலை அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் தயாரிக்க இயலும். வட மாவட்டமொன்றில் இதைப்